# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**(Re-accredited with “A” Grade by NAAC)**

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.**

**தமிழ்நாடு, இந்தியா**

அலுவலகம் : 0431-2407016,2407060

தொலைப்படி : 0431-2407444

மின் அஞ்சல் : coe@bdu.ac.in

வலைத்தளம் : www.bdu.ac.in

**முனைவர் R. திருமுருகன் Ph.D.,**

**தேர்வு நெறியாளர் (பொ.)**

ந.க.எண்: தே.நெ./ம.பி.-II/2018 நாள்:29.01.2018

**பெறுநர்:**

பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட தன்னாட்சி அற்ற கல்லூரி முதல்வர்கள்

அய்யா/அம்மையீர்

பொருள்: மாணவ/மாணவியரின் மறுமதிப்பீடு (Revaluation), ஒளிநகல் (Transparency), மறுகூட்டல் (Retotalling) விண்ணப்பத்திற்கான விதிமுறைகள் - மாற்றியமைப்பது தொடர்பாக.

பார்வை:
1) கடித எண்:12887/K2/2017-3/முதன்மை செயலாளர், உயர்கல்வித்துறை, தமிழ்நாடு அரசு, அவர்களின் 18.08.2017 நாளிட்ட கடிதம்.

2) மாண்பமை துணைவேந்தர் அவர்களின் 22.01.2018 நாளிட்ட ஆணை.

*****

பார்வையில் கண்டுள்ள மாண்பமை துணைவேந்தர் அவர்களின் ஆணையின்படி நவம்பர் - 2017 பருவத்தேர்வு முதல் மாணவ/மாணவியரின் மறுமதிப்பீடு (Revaluation), ஒளிநகல் (Transparency), மறுகூட்டல் (Retotalling) விண்ணப்பத்திற்கான விதிமுறைகள் கீழ்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

1) மாணாக்கர்கள் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிப்பதற்கு, இப்பொழுது நடைமுறையில் உள்ள இரண்டு தேர்ச்சி பெறாத விடைத்தாட்கள் அல்லது ஒரு தேர்ச்சி பெற்ற விடைத்தாளுக்கு விண்ணப்பிக்கலாம் என்பதை மாற்றி மாணாக்கர்கள் இளநிலை (UG), முதுநிலை (PG), ஆய்வியல் நிறைஞர் (M.Phil.), பி.எட்., (B.Ed.), எம்.எட்., (M.Ed.), பட்டயச்சான்றிதழ் (Diploma) முதுநிலை பட்டயச்சான்றிதழ் (PG Diploma) பாடங்களில் **தேர்ச்சி பெற்ற அல்லது தேர்ச்சி பெறாத அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் நடப்புப்பருவத்தேர்வில் எண்ணிக்கை வரையறையின்றி மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கலாம்.**

2) பல்கலைக்கழகத்தேர்வில் (U.E.) 50% குறைவாக பெற்ற மற்றும் தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவியர்கள் ஒளிநகலுக்கு விண்ணப்பித்து ஒளிநகல் பெற்ற ஏழு நாட்களுக்குள் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனை இல்லாமல் **அவரவர் விருப்பத்தின் அடிப்படையில் விடைத்தாளின் ஒளிநகல்(Transparency) மற்றும் மறுகூட்டல் (Retotalling) தேவைப்படின் எண்ணிக்கை வரையறையின்றி அதற்குரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.**

எனவே அனைத்துக் கல்லூரி முதல்வர்களும் இக்கடிதம் மீது தனிக்கவனம் செலுத்தி இச்சுற்றறிக்கையை மாணவ/மாணவியர் அனைவருக்கும் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**தேர்வு நெறியாளர்(பொ.)**